# உங்களது சுகாதார மேம்பாட்டு வாரிய உடலுறுதிக் கண்காணிப்புச் சாதனத்தை Healthy 365 செயலியுடன் இணை சேர்க்க முடியவில்லையா பின்வரும் படிநிலைகளின்படி தீர்வு காண முயலுங்கள்!




### படிநிலை 1

Healthy 365 செயலி அண்மைப் பதிப்புக்குப் புதுப்பிக்கப்பட்டிருக்கிறதா என்பதைச் சரிபார்க்கவும். அதோடு, உங்கள் கைப்பேசியும் சுகாதார மேம்பாட்டு வாரிய உடலுறுதிக் கண்காணிப்புச் சாதனமும் அருகருகில் இருப்பதை உறுதி செய்யவும்.




### படிநிலை 2

உங்களது சுகாதார மேம்பாட்டு வாரிய உடலுறுதிக் கண்காணிப்புச் சாதனம் தவறுதலாக உங்கள் கைப்பேசியின் ஊடலையுடன் (Bluetooth) நேரடியாக இணைக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்யவும். அப்படி இணைக்கப்பட்டிருந்தால், “Settings” > ”Bluetooth” > பகுதிக்குச் சென்று, இணைக்கப்பட்ட சுகாதார மேம்பாட்டு வாரிய உடலுறுதிக் கண்காணிப்புச் சாதனத்தைத் தேர்ந்தெடுத்து >”Forget Device/Unpair” தேர்ந்தெடுத்து, உங்கள் கைப்பேசியுடனான இணை சேர்ப்பை நீக்கவும்.



### படிநிலை 3

உங்கள் கைப்பேசியின் ஊடலையை (Bluetooth) அடைத்துவிட்டு, பிறகு மீண்டும் திறக்கவும். உங்கள் கைப்பேசியின் இணையச் சேவை, இடச் சேவை இரண்டும் திறக்கப்பட்டிருப்பதையும் உறுதி செய்யவும்.




### படிநிலை 4

உங்களது சுகாதார மேம்பாட்டு வாரிய உடலுறுதிக் கண்காணிப்புச் சாதனத்தை மறுபடியும் Healthy 365 செயலியுடன் இணை சேர்க்க முயலவும்.

## நான் இணைசேர்க்கப்பட்ட உடற்பயிற்சி கண்காணிப்புச் சாதனத்தை அடையாளம் காண்பது எப்படி?







### படிநிலை 1

Healthy 365 செயலியின் ‘Profile’ பகுதியில், ‘My Fitness Tracker’ மீது தட்டவும்.

### படிநிலை 2

இணை சேர்க்கப்பட்ட சுகாதார மேம்பாட்டு வாரிய உடலுறுதிக் கண்காணிப்புச் சாதனத்தின் ஊடலை நட்புப் பெயரும் (BFN) Healthy 365 செயலியில் தோன்றும் BFN பெயரும் ஒரே மாதிரி இருக்கிறதா என்பதைச் சரிபார்க்கவும். உங்களது BFN பெயரைக் கண்டுபிடிக்க, சுகாதார மேம்பாட்டு வாரிய உடலுறுதிக் கண்காணிப்புச் சாதனத்தின் திரைகளை மாறிமாறிப் பார்க்கவும்.